# "புகழ் அனைத்தும் உமதே"

## வாரம் 2020

## 16 – 24 மே, 2020

## அனைத்தும் தொடர்புடையனவே!



மனிதவள மேம்பாட்டு அலுவலகம்
காலநிலை மாற்ற பிரிவு
FABC ஆசிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பு

இணையதள பங்காளர்கள்

ஒருங்கிணைந்த மனிதவள மேம்பாட்டுக்கான வத்திக்கான் ஆணையம்

உலகளாவிய கத்தோலிக்க காலநிலை இயக்கம்

# “புகழ் அனைத்தும் உமதே”

## வாரம் 2020

## 16–24 மே, 2020

அனுமதி

**மேதகு பேராயர் அந்தோணி ஆனந்தராயர்,**

**தலைவர், தமிழக ஆயர் பேரவையின்**

**திருவழிபாட்டுப் பணிக்குழு**

தயாரிப்பு

**அருள்பணி. முனைவர் S. அற்புதராஜ்**

பொதுச்செயலர்

தமிழகத் திருவழிபாட்டுப் பணிக்குழு

முப்பணி மையம், திண்டிவனம்

2020

வரலாற்றையே மாற்றும் நிகழ்வுகளின் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து நல் உலகை எவ்வாறு கட்டியெழுப்பவேண்டும் என்பதை "புகழ் அனைத்தும் உமதே" (Laudato Si) என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது மடல் நமக்கு கற்பிக்கிறது. மக்கள் எல்லா இடத்திலும் ஒரு எதிர்பார்ப்புடன், நம்பிக்கைக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பாதைக்கு ஒளியூட்ட இறை நம்பிக்கை நம் உடனடித் தேவையாக உள்ளது. மே 16–24, 2020–ஐ முன்னிட்டு "புகழ் அனைத்தும் உமதே" வாரத்தைக் கொண்டாட நேர்மையான, நிலையான எதிர்காலத்திற்காக கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நாம் தோழமையில் ஒன்றிணைகின்றோம். சிறந்த நாளைய எதிர்காலத்தை கட்டியெழுப்பும் வண்ணமாக இந்நெருக்கடியான காலத்தில் சகோதர, சகோதரிகளாக நம்பிக்கையில் ஒன்றிணைந்து நிற்கிறோம்.

**எனவே நாம் செய்யவேண்டியவை :**

- மே 16–23 வரை மேற்கண்ட இலக்கினைச் சிந்தித்து சமூகத் தொடர்பு ஊடகங்கள் வழியாக இதற்காகத் தயாரிக்கலாம், தியானிக்கலாம்.
- மே 24, 2020–ல் உலகளாவிய இறைவேண்டல் நாளில் இணையலாம்.
- நாம் தயாரிப்பவற்றை 2020 செப்டம்பர் 1–லிருந்து அக்டோபர் 2020 வரையிலான படைப்பின் காலத்தின்போது செயல்படுத்தலாம்.

**பல்வேறு மூலங்களிலிருந்து இந்தக் கையேடு தயாரிக்கப்பட்டிருக்கிறது**

| தேதி | நாள் | பரிந்துரைக்கப்படும் செயல்பாடு |
|---|---|---|
| 16 மே 20 | சனி | ஆன்ம சோதனை |
| 17 மே 20 | ஞாயிறு | படைப்பிற்காக "புகழ் அனைத்தும் உமதே" செபம் |
| | | You Tube–ல் காணொளி பார்த்து தியானித்தல் |
| 18 மே 20 | திங்கள் | செபமாலை செபித்தல் – மகிழ்வின் மறையுண்மை |
| 19 மே 20 | செவ்வாய் | செபமாலை செபித்தல் – துயரின் மறையுண்மை |
| 20 மே 20 | புதன் | செபமாலை செபித்தல் – மாட்சியின் மறையுண்மை |
| 21 மே 20 | வியாழன் | செபமாலை செபித்தல் – ஒளியின் மறையுண்மை |
| 22 மே 20 | வெள்ளி | கார்பன் பதிவுக்கான அமர்வு |
| | | இறை இரக்க செபமாலை |
| 23 மே 20 | சனி | "புகழ் அனைத்தும் உமதே" உறுதிமொழி |
| | | தனிப்பட்ட அர்ப்பணம் |
| 24 மே 20 | ஞாயிறு | இயற்கையோடு இணைந்து வாழ நடைமுறைப் பரிந்துரைகள் – சிந்திக்க, தியானிக்க |
| | | உலகளாவிய இறைவேண்டல் நாள் |

# ஆன்ம சோதனை

## 16 மே 2020, சனிக்கிழமை

“நமது பொதுவான இல்லத்தின் மீது இரக்கம் காட்டுங்கள்” என்று நமது திருத்தந்தை செப்டம்பர் 1, 2016 அன்று வெளியிட்ட செய்தி மடலில் கிறிஸ்தவ இறைநம்பிக்கையின் படி நம் வாழும் இல்லமான இந்த பூமியின் மீது நம்முடைய அக்கறையும் அன்பும் செலுத்துவதற்கு முதல் படியாக நாம் ஆன்ம சோதனை செய்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்று குறிப்பிடுகிறார். இந்த ஆன்ம சோதனை 6 நிலைகளைக் கொண்டது.

1. இறைபிரசன்னத்தில் நிலைத்திருப்பது
2. கடவுளின் படைப்பனைத்திற்காக பல விதங்களில் அவருக்கு நன்றி கூறுவது
3. ஏழைகள் மற்றும் இந்தப் பூமி விடுக்கும் அபயக்குரலைத் தியானிப்பது
4. கடவுளுடைய படைப்பையும் எல்லா உயிரினங்களையும் அக்கறையுடன் நோக்க தவறியதற்காக மனம் வருந்துவது
5. படைப்பிற்கும் அயலாருக்கும் இரக்கம் காட்ட உறுதியெடுப்பது
6. இறைவேண்டலில் நிறைவுசெய்வது

### 1. இறைபிரசன்னத்தில் நிலைத்திருப்பது

♥ ஆண்டவருடைய பிரசன்னத்தை சற்று நேரம் உணர்வோம். கண்களை மூடி சுவாசத்தை உள்வாங்கி கடவுளுடைய குரலை கேட்க அவரின் அருள் வேண்டி மன்றாடுவோம்.

♥ “தனது எல்லா பிள்ளைகளும் தன்னிடம் திரும்பி வர வாஞ்சையோடு காத்திருக்கும் அனைத்து நலன்களும் நிறைந்த இரக்கமுள்ள இறை தந்தையின் முன் படைப்பிற்கும் எதிர்கால சந்ததிக்கும் எதிராக நாம் செய்த பாவங்களுக்காக மனம் வருந்துவோம்” – திருத்தந்தை.

### 2. கடவுளின் படைப்பனைத்திற்காகவும் அவருக்கு நன்றி கூறுவது

♠ படைப்பின் வழியாக கடவுள் கொடுத்துள்ள எல்லா ஆசீருக்காகவும் நன்றி கூறுவோம். நம்முடைய உணவு, நீர், தாவரங்கள், பறவைகளின் கீச்சொலி ஆகியவற்றை நினைவுகூர்ந்து அவைகளுக்காக நன்றி கூறுவோம்.

♠ நம்முடைய வாழ்வோடு தொடர்பில் இருந்தவர்கள், தற்போது இருப்பவர்கள் அனைவருக்காகவும் நன்றி கூறுவோம். உணவு, உடை மற்றும் நம்முடைய தேவைகளை நிறைவுசெய்து நாம் வாழ்வதற்கு காரணமாய் இருந்தவர்களையும், நமது ஆசிரியர்களையும் நன்றியோடு நினைவுகூர்வோம். இயற்கையினின்று விலகியல்ல மாறாக அகில உறவு ஒன்றிப்போடு இணைந்தவர்கள் என்ற அன்பான புரிதலைப் பெற திருத்தந்தை அழைப்பு விடுக்கிறார். நமது வாழ்வு பலரோடு தொடர்புடையது; ஒருவர் மற்றவரைச் சார்ந்துள்ளது.

## 3. ஏழைகள் மற்றும் இந்தப் பூமியின் அபயக்குரல் வரும் விதங்களை தியானிப்பது

- மிகச் சிறிய பருவமற்ற பாதிப்புகளுக்கு நாமே காரணம் என்பதை எந்த அளவிற்கு உணர்கிறோமோ அந்த அளவிற்கு இயற்கையை அழிப்பதற்கும், சீரழிப்பதற்கும் நாம் காரணம் என்பதை உணர்ந்து ஏற்றுக்கொள்வோம். – திருத்தந்தை
- திருத்தந்தை செய்தியில் குறிப்பிட்டுள்ளதுபோல பின்வரும் கேள்விகளை சிந்திப்போம்.
- ஏழை மற்றும் இந்த பூமியின் அபயக்குரலை நாம் கேட்டதுண்டா தாவரங்கள், விலங்குகள், இந்த உலகு துன்பப்படுவதை நாம் உணர்ந்ததுண்டா? உலகில் மக்கள் சந்திக்கும் சமூக மற்றும் பொருளாதார துயரமான சூழ்நிலைகளை தெரிந்துகொள்ள நேரம் ஒதுக்கினோமா? உலகப் படைப்பு மற்றும் உயிரினங்களைப் பாதுகாக்க நான் எடுத்த முயற்சிகள் எவை?
- தேவைக்கு அதிகமான நான் எதையும் எனக்காக பயன்படுத்தினேனா? எனக்கென அபகரித்துக் கொண்டேனா?
- மற்ற மதங்களைச் சார்ந்த பெண்கள், தாயக மக்கள், புலம் பெயர்ந்தோர், வறியவர் மற்றும் சிசுக்களுக்கு விரோதமாக முன்பும் இப்போதும் நான் காட்டிய அநீதிகளையும், மதச் சகிப்பின்மையையும் களைய என்ன வழிகளைத் தேடுகிறேன்?

## 4. கடவுளுடைய படைப்பையும் எல்லா உயிரினங்களையும் அக்கறையுடன் நோக்க தவறியதற்காக மனம் வருந்துவது

- “அகிலமே கடவுளின் அன்பான கொடை என்பதை நன்றியுடனும் நன்றியுள்ள மனப்பான்மையுடனும் ஏற்றுக்கொள்வதில் முதல்படி அமைந்திருக்கிறது. – திருத்தந்தை

- நாம் வாழும் இல்லமான இந்த பூமிக்கு எதிராக செய்த அனைத்தையும் ஆண்டவர் திருமுன் கொண்டுவருவோம். அந்த குற்றங்கள் எவையேனும் ஒப்புரவு அருளடையாளத்தின்போது அருள்பணியாளரிடம் எடுத்துச் சொல்ல வேண்டியிருப்பின், அவ்வருளடையாளத்தை இப்போது நாடுவோம்.

## 5. படைப்பிற்கும் அயலாருக்கும் இரக்கம் காட்ட உறுதியெடுப்பது

- "சுய ஆன்ம சோதனை, மனவருத்தம், அன்பு தந்தையாகிய கடவுளிடம் அறிக்கையிடல் போன்ற இவைகள் நமது மாற்றத்திற்கு இட்டுச் செல்கிறது. இந்த மாற்றம் இயற்கையை, அதிக மதிப்போடும் கண்ணியத்தோடும் நடத்தக்கூடிய வழிமுறைகளை சிந்திக்கவும் செயல்படுத்தவும் நம்மை உந்தித்தள்ளுகிறது. – திருத்தந்தை
- படைப்பிற்கும், ஏழைகளுக்கும், நம் எதிர்கால தலைமுறையினருக்கும் நம் அக்கறையை காட்ட இறையருளை மன்றாடுவோம். திருத்தந்தை பின்வரும் வழிமுறைகளைக் காட்டுகின்றார்:
- வன்முறை, சீரழிவு, சுயநலம் ஆகியவற்றை களைந்து நல்லுலகை உருவாக்க நாம் தினமும் எடுக்கும் சிறு சிறு செயல்பாடுகளே நமது பொதுவான இல்லத்தைக் காக்க நாம் எடுக்கும் இரக்கச் செயல்களாகும். நமது வருங்கால தலைமுறையினருக்கு நான் எத்தகைய உலகை விட்டுச்செல்ல விரும்புகிறேன் என்ற கேள்வியை நமது கண்முன் வைப்போம்.
- நமது பொதுவான இல்லமாகிய இந்த பூமிக்கும் அதில் வாழ்வோருக்கும் எதிர்கால தலைமுறையினருக்கும் என்னுடைய தனிப்பட்ட மற்றும் பொதுவாழ்வில் எத்தகைய மாற்றங்களைக் கொண்டு வருவேன்?

## 6. இறைவேண்டலில் நிறைவுசெய்வது : இறுதி இறைவேண்டல்

- நம்முடைய இந்த சுய ஆன்ம சோதனை நேரத்தில் இறைவனிடமிருந்து பெற்ற வரங்களுக்காக நன்றிகூறி, திருத்தந்தை செய்தி மடலில் குறிப்பிட்ட செபத்தில் இணைவோம் :
- எளியோரின் கடவுளே! உமது கண்களில் மிகவும் மதிப்புப்பெற்ற கைவிடப்பட்டோரையும் மறக்கப்பட்டோரையும் மீட்டெடுக்க எங்களுக்கு உதவியருளும்.
- அன்பின் ஆண்டவரே! இவ்வுலகில் உள்ள எல்லாருக்கும் நாங்கள் உமது அன்பின் கருவிகளாக வாழ அழைக்கப்பட்ட எங்களது நிலையை நாங்கள் கண்டுகொள்ள உதவியருளும்.

☛ இரக்கத்தின் தேவனே! நாங்கள் உமது மன்னிப்பை பெறவும் அதை நாங்கள் வாழும் இவ்வில்லமாகிய பூமியில் உள்ளோருக்கும் காட்டவும் அருள்வீராக.

**உமக்கே புகழ் உரித்தாகுக! ஆமென்**



**குறிப்பு :**

மொழியாக்கத்தில் உதவிய அருள்பணி. ஜோசப் லயனல், அருள்பணி. ம. பிலோமின்தாஸ், அருள்பணி. வ. இரபேல் அவர்களுக்கு நன்றிகள்.